ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

அக்டோபர் 1952

ஹோமியோபதியில் "மஞ்சள்" பத்திரிகை 2
ஹோமியோபதியின் வேதாந்தம் ... 7
திறப்பு விழாக்கள் ... 10
கட்டுக்கரப்பான் என்ற வியாதிக்கு சிகிட்சை 11
அனுபவ கேஸ் விபரம் 14
ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவில் 'குழந்தைகள்' 17

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஔஷதங்கள்

1 முதல் 24 ஔஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் **கும்பகோணம்**

சென்னை விலாசம்

289, சைனபஜார் ரோட் — **மதராஸ்-1**

ஹோமியோபதி

VOL. 6 1952 அக்டோபர் No 7

ஹோமியோபதியில் "மஞ்சள்" பத்திரிகை

'மஞ்சள்' பத்திரிகை என்றவுடன் ஏதோ கல்யாணப் பத்திரிகை என்று நேயர்கள் நினைக்க வேண்டாம். நேர்மைக்கும், ஞாயத்திற்கும், உண்மைக்கும் புறம்பான விஷயங்களை, தன் சொந்த லாபத்தைக் கருதி, பத்திரிகை என்ற பெயரிலே வெளியிடும் சில நபர்கள் நம்மிடையே இருக்கின்றார்கள். இவ்வாறு வெளிவரும் பத்திரிகை "மஞ்சள் பத்திரிகை" என்று கூறப்படும். "காமாலைக் கண்ணனுக்கு" எல்லாம் மஞ்சளாகத் தெரிவதுபோல, இம்மாதிரியான பத்திரிகைகளை வெளியிடும் காமாலைக் கண்ணர்களுக்கு தங்களுக்கு லாபம் உள்ள விஷயங்கள் தவிர மற்றவை எல்லாம் மஞ்சளாகவே தென்படும். இந்த வியாதி இன்று ஹோமியோபதிப் பத்திரிகை ஒன்றிற்கும் தொத்திவிட்டதைக் காண வருந்தாமலிருக்க முடியவில்லை.

திருவாங்கூர் இராஜ்ஜியத்திலே மாவேலிக்கரை என்னும் ஊரில், சில வருடங்களாக "கிரேஸ் மெடிகல் மிஷன்" ஒன்ற ஒரு ஸ்தாபனம் காப்டன் ஓமன் என்னும் ஒரு அல்லோபதி டாக்டரால் நடத்தப்பட்டு வருகிறது. டாக்டர் ஓமன் அவர்கள் ஒரு மாஜி ராணுவக் காப்டன். அதன் பின்னர் அரசாங்க உத்தியோகத்திலிருந்து, யாது காரணம் பற்றியோ, நீங்கி, ஹோமியோபதித் தபால்பாட ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகிறார். இன்று யாரும், தனக்கு அறிவும் ஆற்றலும் இருந்தால் ஹோமியோபதித் தபால்பாட ஸ்தாபனங்களை நடத்தலாம்; நல்ல முறையில் நடத்தப்பட்டால் மக்கள் ஆதரவு கிடைக்கும்; நல்ல முறையில் நடத்தப்படாவிட்டால் மக்கள் ஆதரவு கிடைக்காது; ஆகவே அதிவிரைவினில் மக்கள் ஆதரவு கிடைக்காத ஸ்தாபனம் மூடப்படும். இவ்வாறு பல ஸ்தாபனங்கள் சமீப காலத்தில் அடிக்கடி திறந்து மூடப்பட்டிருக்கின்றன.

ஆனால் நமது மாஜி காப்டன் அவர்கள், வேறு முறைகளைக் கையாண்டு தன் ஸ்தாபனத்திற்கு ஆதரவு தேடி வருவதுதான் கண்டிக்கத்தக்கதாக இருக்கிறது. உதாரணமாக ஷை மாஜி காப்டன், தன்னால் நடத்தப்படும் ஸ்தாபனம் ஒன்று தவிர இந்தியாவில் நடத்தப்படும் மற்ற எல்லா ஸ்தாபனங்

களும் 'போலிகள்' என்று பொருள்பட அவ்வப்போது அறிக்கைகள் விட்டுக் கொண்டே இருப்பார். இதை நம்பி மோசம் போவோரும் உண்டு. ஆனால் இன்றைய சூழ்நிலையில் இவ்வாறு செய்யப்படும் ஒரு பிரச்சாரத்திற்கு எவ்வளவு மதிப்பிருக்கும் என்பது சொல்லாமலேயே விளங்கும். ஆகவே நம்மவரில் பெரும்பாலோர் அறிவாளிகளாகையால், இவர் செய்து வரும் தற்புகழ்ச்சிப் பொய்ப் பிரசாரத்திற்குச் செவி சாய்ப்பது இல்லை. ஆகவே தான் இன்று தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் நல்ல முறையில் தபால் பாடங்கள் நடந்து வருகின்றன. இந்த ஸ்தாபனங்களில் பல நூறு மாணவர்கள் வருடா வருடம் சேர்ந்து தேர்ச்சி பெறுகின்றனர். இந்த ஸ்தாபனங்களில் முக்கியமானவை தினே தினே அபிவிருத்தி அடைகின்றன. இந்த ஸ்தாபனங்களில் ஒன்றும், "என் கத்தரிக்காய் நல்லது, அடுத்த கடையில் சொத்தைக் கத்தரிக்காய்தான் கிடைக்கும்; ஆகவே இங்கே வாருங்கள்" என்று பிரச்சாரம் செய்வது இல்லை. ஞாயமான பிரச்சாரத்தில் ஒருவர், தன் உயர்வைப் பற்றி எவ்வளவு சொல்லிக்கொண்டாலும் அதில் தவறு இல்லை: ஆனால் தன் வியாபாரத்தில் போட்டியிடும் நபரைப் பற்றித் தாழ்த்தி, அதுவும் பொய்யாகப், பிரச்சாரம் செய்வது தன்னையே படுகுழியில் தள்ளிக்கொள்வதற்கு ஒப்பாகும் என்று மாஜி காப்டனுக்குத் தெரியாதது விந்தையே. இவர் செய்யும் பிரச்சாரங்களைப் பற்றி மற்றவர்கள் இவர்மேல் கோர்ட்டு வழக்குகள் தொடங்காமலிருக்கின்றார்கள் என்றால், அதற்கு முதலாவது காரணம், இவரால் பாழ்படுத்தப்பட்டு சாக்கடையில் கட்டி இழுக்கப்படும் 'ஹோமியோபதி'யை அந்த அலங்கோலத்துடன் ஒரு கோர்ட்டிலும் கொண்டுவந்து நிறுத்தி மேலும் அதை அவமானப்படுத்தாமலிருக்கவே! தவிர' இரண்டாவது காரணமும் ஒன்று உண்டு. அதாவது இவரால் செய்யப்படும் மட்டரகமான பிரச்சாரத்தினால் ஒருவரும் பாதிக்கப்படவில்லை என்பதே. இவ்வாறு அவர் செய்துவரும் பிரச்சாரங்களில் முக்கியமானது: தான் அல்லோபதிப் படித்துப் பட்டம் பெற்று, மாஜி காப்டனாக இருப்பதால்தான் ஹோமியோபதியைச் சொல்லிக் கொடுக்க அருகதை உடையவரென்றும், வேறு ஒருவரும் அதைச் செய்யக்கூடாது என்பதுவே. தவிர தனது ஸ்தாபனம் ஒன்றே உண்மையானது என்பதும், மற்றவை அனைத்தும் 'போலி' என்பதுமே. இவரின் கூற்று விசித்திரமானது. இவர் அல்லோபதி படித்தும் பட்டம் பெற்று, திருவாங்கூர் கொச்சி இராஜ்ஜியத்தில் வைத்து நடத்தும் ஸ்தாபனத்திற்கு அரசாங்க அங்கீகாரம் உண்டா? இல்லை என்பதே தெளிவு. (யாருக்காயினும் சந்தேகமிருந்தால் அடுத்த பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் T. C. கவர்மெண்டு கடிதத்தைப் பார்த்துக்கொள்ளவும்.) மற்றவர்களைவிட இவர் உயர்ந்தவராயிருந்தால் ஏன் இவரை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வில்லை? இந்த நிலைமையில் இருக்கும் இவர், ஏன் மற்றவர்களை குறைகூற வேண்டும்?

சமீப காலத்தில் இந்த மாஜி காப்டன் தன்னுடைய பிரச்சாரத்திற்காக ஒரு ஆங்கில மாத சஞ்சிகையும் ஆரம்பித்திருக்கின்றார். இந்த "Homoeo-

GOVERNMENT OF TRAVANCORE-COCHIN.

HL9-7704/51/EHL.

Government Secretariat,
Trivandrum, 2nd July '51.

From

The Secretary to Government.

Sub: Grace Medical Mission, Mavelikara - information regarding.
Ref: Your letter dated 16-6-51.

Sir,

With reference to the above, I am to inform you that the Grace Medical Mission, Mavelikara, has not been recognised as a teaching institution by the Travancore Medical Council or by the Government of Travancore-Cochin and that the students who undergo courses of instruction in that institution are not eligible for registration under the Travancore Medical Practitioners' Act.

Yours faithfully,

For Secretary to Government.

ஜோதிஜோபதி

pathy & Comparative medicine" என்னும் பத்திரிகையின் அக்டோபர் மாத இதழில், சமீபத்தில் மதுரையில் நிருவப்பட்டிருக்கிற "மதராஸ் ஸ்டேட் சென்ட்ரல் கவுன்ஸில் of ஹோமியோபதஸ்" என்னும் ஸ்தாபனத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அது ஒரு 'போலி' ஸ்தாபனமெனவும், அதற்கு இடப்பட்டிருக்கிற பெயர், அரசாங்க ஸ்தாபனம் என்று நினைக்கும்படி மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் இருக்கிறதென்றும், இந்த ஸ்தாபனத்தின் தலைவர் தவிர மற்றவர்கள் போலி வைத்தியர்கள் எனவும், ஷை தலைவர் **இந்த ஸ்பானத்தில் இருக்க இஷ்டப்பட்டிருக்கமாட்டார்** என்று தாம் நம்புவதாகவும், மற்றும் சம்பந்தமில்லாத பல விஷயங்களையும் எழுதி இருக்கின்றார். ஒரு ஸ்தாபனம், அதிலும் இலாபத்தைக் கருதாது 'ஹோமியோபதிக்குத் தொண்டு' என்ற ஒரே நோக்கத்துடன் நம் நாட்டிலுள்ள பல ஹோமியோபதி அறிஞர்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம்; ஒரு மாபெரும் ஹோமியோபதி மகாநாட்டில் பலநூறு ஹோமியோபதி டாக்டர்களின் முன்னிலையில் உருவாக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் 'போலி'யாம்! ஏன்? இந்த ஸ்தாபனத்தின்மூலம் ஆரம்பிக்கவிருக்கும் "ஆறுமாதகால நேர்முகப்படிப்பு" நமது மாஜி காப்டனுடைய குடும்ப சம்பாத்தியத்திற்கு இடர் விளைக்குமென்ற பயம்தான் காரணம் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக இந்த ஸ்தாபனத்தின் தலைவர், மாஜி காப்டனைப்போல, சரி சமமாகவும், சற்று விசேஷமாகவும்கூட, அல்லோபதி படித்தவராதலின், அவரைப்பற்றி அவரும் 'போலி' என்று கூற முடியவில்லையாதலின், அவர் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டிருக்கமாட்டார் என்று ஜோதிடம் கூறுகிறார். ஒரு மாஜி காப்டன் ஒரு லாபம் சம்பாதிக்கும் தபால்பாட ஸ்தாபனத்தை நடத்தத் தலைமை வகிக்கும்போது, நேர்முக வகுப்புகள் நடத்தும் ஒரு ஸ்தாபனத்தில், அதுவும் இலாபத்திற்காக இல்லாத ஒரு ஸ்தாபனத்தில், ஒரு M. B., B. S., தலைமை தாங்குவதில் என்ன தவறு என்று அறிய விரும்புகிறோம்.

இந்த ஸ்தாபனத்தில் தலைவர் தவிர மற்றவர்கள் எல்லோரும் போலிகளானல், மாஜி காப்டனின் ஸ்தாபனத்தில் தலைவர் தவிர மற்றவர்கள் என்னவென்று கேட்க விரும்புகிறோம். அவருடைய ஸ்தாபனத்தில் மற்றவர்கள், அவருடைய நெருங்கிய உறவினர்கள் ஆதலின் ஒருக்கால் அவர்களுக்கும் மாஜி காப்டனின் படிப்பில் பரம்பரை பாத்யதைப்படி பங்கு உண்டுபோலும்.

இது விஷயத்தை மேலும் வளர்த்திக்கொண்டுபோவது அனுவசியம். ஆனல் கடைசியாக ஒரே விஷயத்தை மாத்திரம் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. மதுரை ஸ்தாபனத்தின் பெயர் பிறரை ஏமாற்றுவதாக இருக்கிறது என்கிருர் மாஜி காப்டன். ஆனல் அவர் ஸ்தாபனத்தின் பெயர் எவ்வாறு இருக்கிறது என்பதை அவர் சிந்திக்கவில்லை போலும். "க்ரேஸ் மெடிகல் மிஷன்" என்பது ஏதோ கிருஸ்தவப் பாதிரிமார்கள் தர்மத்திற்காக நடத்தும் ஸ்தாபனம் என்று பிறர் ஏமாறுவதற்கு ஏதுவாகிறதல்லவா? உண்மையிலேயே அது அவ்வாறு ஒரு தர்ம ஸ்தாபனமா? இது மாஜி

காப்டனுக்கும், அவருடைய நெருங்கிய உறவினர்களுக்கும், சந்ததியாருக்கும் சொந்தமான ஒரு வியாபாரமல்ல, இந்த வியாபாரத்தினல் கிடைக்கும் இலாபம் அவ்வளவும் அவருடைய குடும்பத்தையே அடையும் என்பதை பற்றி அவர் பகிரங்கமாக ஒரு அறிக்கைவிட முடியுமா? இதை அவர் செய்யாவிட்டால் இவர் வைத்திருக்கும் பெயர் "ஏமாற்றுதல்" (Hoax) அல்லாமல் வேறு என்ன?

தவிர இவர் பிரமாதமாக நடத்துவதாகக்கூறும் ஸ்தாபனத்தில் படித்துத் தேர்ச்சிபெற்றவர்களையும் 'போலி'கள் என்று இவரே அழைக்கும்போது, இவரையும், இவரை இனியும் நம்பும், பல்வேறு மாணவர்களையும் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

கவர்னர் சூடு கொடுக்கிருர்!

மத்தியப் பிரதேச கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா அவர்கள் ஒரு தேர்ச்சி பெற்ற டாக்டர். அவர் சென்ற 11—10—52 அன்று அமராவதியில் நான்காவது மத்தியப் பிரதேச மாகாண வைத்ய மஹாநாட்டைத் திறந்து வைக்கையில் கீழ்க்கண்டவற்றைக் கூறினர்:—

"இந்தியன் மெடிகல் அஸோஸியேஷனின் மெம்பர்களில் சிலர், ஆயுர்வேத வைத்தியம் சாஸ்திரீய மானதா" என்று கேட்கின்றனர். இதை அவர்கள் கேட்க அவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது என்று நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். ஆயுர்வேத வைத்தியத்தைப் பற்றிக் கேள்விகேட்க அவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது; இந்த வைத்தியம் ஆதிகாலம் முதல் 7-வது நூற்றாண்டு வரையில் இந்தியாவில் மஹோன்னத நிலைமையில் இருந்தது என்பது அவர்களுக்குத் தெரியுமா? சரக சம்ஹிதா என்ற ஆயுர்வேத வைத்திய நூலை ஜாம்நகர் டாக்டர் மேதா என்பவர், ஆங்கிலம், ஹிந்தி, குஜராதி முதலிய பாஷைகளில் மொழி பெயர்த்திருக்கிருர் என்பதும், இந்த நூலில் அரிய பொக்கிஷங்களும், வைத்திய அறிவும் பொதிந்திருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்களா?"

இதே பதிலைத்தான், ஹோமியோபதி இன்னதென்று அறியாமல், அதைக் குறை கூறவும், அதை முன்னேற்றுவதற்கு (?) முன்வரவும் செய்யும் அல்லோபதி டாக்டர்களையும், ஹோமியோபதி சம்பந்தப் பட்ட கமிட்டிகளில் அலோபதியர்களை நியமிக்கும் அரசாங்கத்தையும் நாம் கேட்கிறோம்.

ஹோமியோபதியின் வேதாந்தம்

பம்பாய் டாக்டர் S. N. K. மூர்த்தி
(முன் தொடர்ச்சி)

ஸ்லோகம் 191

முன் ஸ்லோகத்தில் கூறியது நாம் அனுபவத்தினுல் சிறிது கூட சந்தேகத்திற்கிடல்லாமல் அறியப்படுகிறது. எப்படி யென்ருல் ஒவ்வொரு சக்தி உள்ள மருந்தும் உள்ளுக்கு சாப் பிட்டவுடன் பொதுவில் உடம்பில் சில பாகங்களில் நிச்சயமாக சில மாறுதல்களை உண்டுபண்ணுகிறது, அப்படி உண்டுபண் ணுவது உடம்பின் நன்மைக்கேயாம். ஏனென்ருல் வெளிக் குறிகள், வெளிப்பூச்சு மருந்து எதுவுமின்றி மறைந்தவுடன் உடம்பின்கண் உள்ளிருக்கும் வியாதியும் தானே மறைந்துவிடு கிறது. ஆனல் இது ஹோமியோபதி முறையில் சரியான மருந்தை பொறுக்கி எடுத்து கொடுத்திருந்தால்தான் இப்பயனை எதிர்பார்க்கலாம்.

N. B:— இப்படி வெளித்தோன்றும் வியாதிகளை அல்லோ பதி வைத்தியமானது தனிப்பட்ட வியாதிகள் என்று நினைத்து அதற்கு மேல்பூச்சு மருந்துகளைப்போட்டு வியாதியை விரட்டப் பார்க்கின்றது. ஆனல் வெளியே விரட்டவில்லை. உள்ளேதான் அமுக்கப்படுகிறது.

ஸ்லோகம் 192

இது எப்பொழுது சாத்தியமாகுமென்ருல் கேஸ் எடுக்கும் பொழுது தற்கால வியாதிகளையும் அதன் விசேஷ குணங்களை யும் (பலவித மாறுதல்கள் சமனங்கள் அதிகமாதல்) அறிவதோடு அல்லாமல் முக்கியமாக வியாதி மருந்துகள் சாப்பிடுவதற்கு முன் என்ன நிலைமையில் இருந்தது என்று தெரிந்துகொண்டு எந்த மருந்தில் (ப்ருவிங்) குணுதிசயங்கள் இப்போது எடுத்த கேசுக்கு ஒற்றுமையாக இருக்கிறது என்று அலசி ஆராய்ந்து கண்டுபிடித்து எடுத்துக் கொடுத்தோமானல் அதுவே உண்மை யான ஹோமியோபதியில் முறையின்படி பொறுக்கி எடுக்கப் பட்டதாகும்.

ஸ்லோகம் 193

இதுமாதிரி பொறுக்கி எடுத்து உள்ளுக்குக் கொடுத்த பிறகு உடம்பின்கண் உள்ள பொதுவியாதி மேல் தோன்றின குறிகளோடு தானகவே மறைந்துவிடும். இதனுல் நாம் மேல் இருக்கும் குறிகள் உள்ளிருக்கும் வியாதிக்கு சம்பந்தம் உள்ளது என்றும் வெளியிலிருக்கும் குறிகள் உள்ளிருக்கும் வியாதியின் ஒரு பாகமே என்பதையும் தெளிவாக அறியலாம்.

ஸ்லோகம் 194

தோன்றி மறையும் வியாதியினும். ஆரம்பத்தில் தோன்றியதாயிருந்தாலும் சரி தனிப் பட்டு மேலிருக்கும் வியாதிகள் நீண்ட நாட்களாக இருந்தாலும் சரி மேல் பூச்சு மருந்து கொடுப்பது பிரயோஜனமில்லை உள்ளுக்கு மருந்து கொடுத்து குணம் செய்வதுதான் முறை (அடிபட்ட காயங்கள் தவிர மற்றவைகளுக்கு உள்ளுக்கு மருந்து கொடுத்துத்தான் தீரவேண்டும், ஆனுல் இப்படி உள்ளுக்கு கொடுக்கும் மருந்தினுல் வியாதி முற்றும் குணமாகாமல் வெளிக் குறிகள் விடாப்பிடியாக (வியாதியஸ்தர் சரியான சட்ட திட்டங்களுக் குட்பட்டு நடந்து கொண்டும் கூட) இருந்தால் நாம் இது ஸோராவின் குறி நாட்பட்ட வியாதியாக மாறுகிறது; உடலுக்கு வியாதியை அகற்றும் சக்தியில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டியது).

ஸ்லோகம் 195

இது மாதிரியான கேஸ்களில் வியாதியை முற்றும் குணம் செய்வதற்கு நாம் செய்யவேண்டியது என்ன வென்ருல் தற்போது தோன்றிய வியாதிக்குத் தகுந்த மருந்து கொடுத்து அது நீங்கினவுடன் ஹானிமன் நாட்பட்ட வியாதிகள் (Chronic Diseases) என்னும் புஸ்தகத்தில் கூறியபடி ஸோரா வுக்கு எதிரியான (Anti-psoric) மருந்தை எஞ்சியிருக்கும் குறிகளுக்கும் வியாதியஸ்தரின் தற்போது உள்ள வியாதியின் முன் நிலைமைக்கும் தகுந்தவாறு பொறுக்கி எடுக்க வேண்டும்.

தூர் வியாதிகள் (கொனோரியா ஸிபிலிஸ் முதலியன) அல்லாது மற்ற நாட்பட்டு இருக்கும் உடம்பின் மேல் வியாதிகளுக்கு இந்த ஸோராவுக்கு எதிரியான (Anti-psoric) மருந்தே போதுமானது.

(தொடரும்)

ஸ்திரீகளின் சகல கர்ப்பாசயக் கோளாறுகளுக்கும்

"சோதரி"

நிகரற்ற ஔஷதம்

விபரங்களுக்கு

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் — கும்பகோணம்

சென்னை விலாசம்:

289, சைனபஜார் ரோட் – மதராஸ் 1

திறப்பு விழாக்கள்

திருச்சி, 2, வரகனேரி பஜார், டாக்டர் எம். நடேசன் M. I. H. அவர்களின் **''மூர்த்தி ஹோமியோ கிளினிக்''**கை ''தமிழர் நாடு'' ஆசிரியர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சென்ற 3—9—52 புதன் அன்று திறந்துவைத்தார்.

ஊத்துக்குளி டாக்டர் N. S. நாதன் M. I. H. சென்ற 10—9—52 முதல் **''ஹோமியோபதி வைத்தியசாலை''** ஆரம்பித்து நடத்திவருகிறார்.

டாகடர் V. S. ராமதுரை M. I. H. அவர்களின் **''சித்த & ஹோமியோ சிகித்ஸா சாலை''**யை ஸ்ரீ-ல-ஸ்ரீ ப. கந்தசாமி சுவாமிகள் மூங்கில் தோட்டத்தில் திறந்துவைத்தாராம்.

மதுரை டாக்டர் U. பாக்கியநாதன் தனது கிளை வைத்தியசாலையை தெற்கு வெளி வீதி 122-ம் நெம்பர் கட்டிடத்தில் திறந்திருப்பதாக அறிவிக்கிறார்.

''கஸ்தூரிபா வைத்தியசாலை'' என்னும் பெயரில் அனந்தலையில் ஒரு வைத்தியசாலையை திரு. A. K. கிருஷ்ணசாமி (ஹோமியோ டாக்டர்) ஆரம்பித்திருக்கிறார்.

தஞ்சை ஜில்லா – சுவாமிமலையில் Dr. G. ஷண்முகசுந்தரம் M. I. H., F. T. H. C. **''சாந்தகுண சித்த ஹோமியோ வைத்தியசாலை''**யை சிறப்புடன் நடத்திவருவதாக அறிவிக்கிறார்.

டாக்டர் A. M. ராஜமாணிக்கம் M. I. H. தில்லையாடியில் **''மூர்த்தி ஹோமியோபதி டிஸ்பென்ஸரி''** என்ற பெயரில் ஒரு வைத்தியசாலை ஆரம்பித்திருக்கிறார்.

கட்டுக்கரப்பான் என்ற வியாதிக்கு சிகிட்சை

DR. C. H. ராஜரெத்தினம், M. I. H.

கட்டு கரப்பான் எனப்படுவது, கை கால்களின் மூட்டுகளிலும் அல்லது துடை கெண்டைக்கால் என்னுமிடங்களிலும் ஏற்படுகிறது. மேல் சொன்ன எல்லா இடங்களிலும் ஏற்படுவது இல்லை. ஏதாவது குறிப்பிட்ட ஒரு இடத்தில் ஏற்படும் வியாதி. ஆரம்பத்தில் அமைதி யற்ற தன்மை. அதிக செங்கிறமுள்ள வீக்கம். வீக்கமுள்ள இடத்தில் தெறிப்புள்ள வலி இவைகளுடன் இருக்கும். ஆனால் இம்மாதிரி ஏற் படுவது, கொட்டெறும்பு, வண்டு, தேனீ முதலிய பூச்சிகளின் கடிக ளின் அங்கமாகவும் ஏற்படும். அப்படி ஏதோ ஒரு பூச்சிக்கடித்தால் அக்கணமே நமக்குத் தெரிந்துவிடுகிறது. அல்லது, இரவில் தூங்கும் போது இம்மாதிரி ஏற்பட்டுவிட்டால், இவ்விருவகையில் எதன் எதனால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று யோசிக்கவேண்டியதாய் இருக் கிறது. ஆனால் வியாதியின் குறிகளில் வித்யாசம் இருக்கிறது. பூச்சி களின் கடியால் ஏற்பட்டால், கடித்த இடத்தில் வியர்வை, செங்கிற வீக்கம், எரிச்சல், வலி இருப்பதுடன், சரீர உஷ்ணம் சாதாரணத்தை விட 2 டிகிரி அதிகமாக இருக்கும். இம்மாதிரி வியாதியாக இருந்தால் வீக்கம், செங்கிறம், அதிக தெரிப்புள்ள வலி, அமைதியற்ற தன்மை இருக்கும். எவ்வளவு கடுமையாக இருந்தாலும் சரீர உஷ்ணம் சாதா ரணமாகவே இருக்கும். வலியுள்ள பாகங்களில் எரிச்சலும் வியர்வை யும் இருக்காது.

தவிர, கிராமப் பழக்கப்படி இம்மாதிரி வியாதி ஏற்பட்டால், பெட் ரோல், ஸ்பிரிட், டிஞ்சர், கற்பூரத்தைலம், பாம் அஞ்சனங்களை வலி யுள்ள பாகங்களில் வெளிபூச்சாக உபயோகிப்பதின் மூலம் நிவர்த்தி யாகிவிடுகிறது சிலருக்கு. இதில் நிவர்த்தியாகாவிட்டால், மந்திரத் தால் பாடம்போட்டு நிவர்த்தியாகிறது. பொதுவாக, பெரும்பாலும் கிராமங்களில், வீக்கம், வலி, கட்டி, பிளவை, சிலந்தி இவைகளுக்கு பாடம் போடுவது சகஜமாக இருக்கிறது. இச் சிகிட்சையால் பல ருக்கு சொஸ்தமும், பலருக்கு இல்லாமலும் போய்விடுகிறது.

இனி கரப்பான் வியாதியஸ்தரைப் பார்ப்போம். சுமார் 55 வய துடைய அம்மையாருக்கு ஒருநாள் இரவில் திடீரென்று வலது கை மணிக்கட்டில் மேல் சொன்னவாறு வீக்கமும் வலியும் கண்டது. நான் சிகிட்சை அளிக்க முற்பட்டேன். இக்கிராமங்களில், எந்த வலிக்கும்

சரும உபாதிக்கும் உள்ளுக்கு மருந்து கொடுத்தால் நோயாளிகள் விரும்புவது இல்லை. மேலுள்ள வியாதிக்கு வெளிப்பூச்சு மருந்துகளில் தான் மோகம். மேலும் 3, 4 நாட்களுக்கு மருந்து சாப்பிடவேண்டு மென்று சொல்லிவிட்டால் போதும். அடேயப்பா இன்னும் மூன்று நான்கு நாளைக்கு மருந்து சாப்பிட்டுக்கொண்டே வலியைப் பொருத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் இந் நோயாளி அப்படி சொல்பவர் அல்ல. ஏனென்றால் இவர் என் தாயார். ஆகவே, பொருமையாக சிகிட்சை செய்ய அவகாசம் கிடைத்தது.

முதலாவது இவர். உன் சாராய மருந்து எனக்கு வேண்டாம் மந்திரத்தால் பாடம் தான் அடிக்க வேண்டும் என்று சொல்லி விட்டார். சரியென்று மந்திரவாதியை தேடினேம், மந்திரவாதி வியாதியுற்ற பாகத்தை பார்த்து விட்டு 3 நாள் பாடம் அடிக்க வேண்டும். ஆனல், இன்று அமாவாசை நாளை பாட்டிமை போகட்டும் பிறகு பாடம் அடிக்கலாம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

என்தாயாருக்கு, எப்படி இன்னும் இரண்டு நாள் வலியை பொறுத்துக் கொள்வது என்ற கவலை, ஹோமியோபதி டாக்டராக இருந்தும், இப்போது இன்னும் 4 நாளைக்கு தாயாருக்கு கை சுகமாகும் வரையில் நாம் தானே சமையல் செய்ய வேண்டும் என்ற கவலை எனக்கு, என்ன செய்வது. தாயாருக்கு வேண்டிய அளவு அன்று, உபதேசம் பண்ணி. தாயாரை மருந்து, உட்கொள்கிறேன் என்று சொல்லும் நிலைமைக்கு கொண்டு வந்தேன். கரப்பான் வியாதிக்கு, ஹோமியோபதியில் ஏற்பட்ட ஔஷதம் ரஸ்டாக்ஸ், ஆனல். குறிகளை கவனிக்க வேண்டும் நான், இவருக்கு பெல்லடொன்னு 30 வீரியத்தில் தினம் 3 வேளைகள் வீதம் கொடுத்தேன். ஏற்கனவே, இவருக்கு முன் கோபம் அதிகம் என்று தெரிந்து இருந்ததால் சாமோமில்லா 30 வீரியத்தில் 2 வேளை கொடுத்து பெல்லடொன்னு சமோமில்லா இவ்விரண்டையும் வீதம் மாற்றி வீதம் கொடுத்து. நம் இன்ஸ்டிடியூட்டில் தயாரித்த பெல்லடொன்னு வெளி பூச்சு களிம்பு வெளி உபயோகம் செய்யப்பட்டது. 4 நாட்களில் சௌக்கியம் உண்டாயிற்று. இப்போது நன்ருக சமைத்து அறுசுவை உண்டியுடன் எனக்கு அளிக்கிருர்கள். நம் நண்பஞன ஹோமியோபதியை என்னென்று புகழ்வது.

பர்மா, மண்டலே டாக்டர் M. பால் M. B.
அவர்களால் எழுதப்பட்ட

'ஹோமியோபதி குடும்ப வைத்திய சிகிச்சை'

(இரண்டாவது பதிப்பு)

வெளிவந்துவிட்டது

★

விஷயங்களை நல்ல முறையில் விளக்கி
உயர்ந்த காகிதத்தில் நன்ருக அச்சிடப்பட்டிருக்கிறது.

பாக்கெட் சைசில் கெட்டியாக காலிகோ பைண்ட்
செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும்
ஒவ்வொரு ஹோமியோபதி டாக்டருக்கும்
மிக அவசியமான ஒரு புத்தகம்.

★

விலை ரூ. 2—0—0 தபால் செலவு தனி

பிரசுரகர்த்தர்:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் (தென் இந்தியா)

அனுபவ கேஸ் விபரம்

(Dr. Thandavarajan M. I. H. Viragalur. Lalgudy Tlk)

கருச் சிதைவில் ஹோமியோபதியின் சுகப்பிரசவம்

பெயர்: பழனியம்மாள். கணவன்: கிருஷ்ணன் சேர்வை
இடம்: விரகாலூர், லால்குடி தாலுக்கா

இந்த அம்மாளுக்கு 11 வருஷங்களாக, 4 குழந்தைகள் கருத்தரித்து, 3-ம் மாதங்களிலும் 4-ம் மாதங்களிலுமாக 4 கருச் சிதைவுகள் ஏற்பட்டு, ஒவ்வொரு சிதைவுக்கும் மிகவும் கஷ்டம் அடைந்துள்ளன என்பது பற்றி, விபரமாகத்தெரிவித்து, தங்களுக்கு தெரிந்தவரை கவனித்து மருந்து கொடுக்கவேண்டுமென்று சொன்னதின் நிமித்தம், என்னுடைய சிறிய அனுபவத்தின் மூலம் கூடுமானவரை கவனிக்கிறேன். தாங்கள் மட்டும் அடிக்கடி சிதைவு ஏற்படுகிறதேயென்று அலட்சியமாயிராமல் மிகவும் ஜாக்கிரதையாக கவனித்தீர்களானல், எங்கள் ஹோமியோபதி தங்களை இன்புறச் செய்யும் என்று கீழ்க்கண்டபடி நடந்துகொள்ளுங்கள் என்றும் தெரிவித்தேன்.

அதிகப் பிரயாசைப்படாமலும் திடீரென அதிகச் சந்தோஷப்படாமலும் நினைத்தது நிறைவேறவில்லையே யென்று கவலைப்படாமலும் அஜாக்கிரதையாக கீழே விழுந்து அதிர்ச்சியாகாமலும், படுக்கையில் யாதொரு சிந்தனையுமில்லாமல் அமைதியாக இருந்துகொள்வதுடன் கடின வேலைகள் செய்யாமலும் ஜீரணமாகாத கடின பதார்த்தங்களையும், அதிக சூடுள்ள பதார்த்தங்களையும், காப்பி, தேத்தண்ணீர் முதலியவைகளையும் சாப்பிடாமல் ஜாக்கிரதையாகக் கவனிப்பதுடன் நன்றாக ஜீரணமாகக்கூடிய பதார்த்தங்களைக் கொடுங்கள்என்று தெரிவித்து, கருப்பந்தரித்த 4-வது மாதத்திலிருந்து அவ்வப்போதுள்ள குறிகளுக்குத் தக்கபடி கீழ்க்கண்ட மருந்துகளைக் கொடுத்து வந்தேன்.

பெல்லொடொன்ன, சபீன, அகோனைட், சாமோமில்லா, ஸெபியா, பல்ஸடில்லா, ஸல்பர், கல்கேரியா கார்ப் இத்துடன் 5-வது மாதத்திலிருந்து (Bio) காலிபாஸ் தினம் ஒரு வேளை வீதம் கொடுக்கப்பட்டது.

8-வது மாதத்தில் காலோபில்லம் கொடுக்கவேண்டிய குறிகள் இருந்தது. காலோபில்லம் 200x வாரத்திற்கு ஒரு வேளை காலீபாஸுடம் தொடர்ந்து கொடுக்கப்பட்டது.

10 மாதக்கடைசியில், 21—9—52உ மாலை 2 மணிக்கு வலி ஏற்பட்டு, வலி குறைவாயிருப்பதாகத் தெரிவித்தார். பல்சடில்லா 200-ல் 5 சொட்டுகள் 4 அவுன்ஸ் வெந்நீரில் கலந்து அரை மணிக்கு ஒரு தரம் காலிபாஸுடன் சேர்த்துக் கொடுக்கப்பட்டது. மருந்து கொடுத்த 2 மணி நேரத்திற்குள் பனிக்குடம் உடைந்து, மாலை 4 மணிக்கு ஆண் குழந்தை சுகப்பிரஸவமானது பற்றி மிகவும் ஆனந்தமடைந்தார்கள்.

பிரஸவமான அன்று ஆர்னிகா 3 டோஸ் கொடுக்கப்பட்டது. பிறகு குறிகளுக்குத் தக்கபடி நக்ஸ்வாமிகா, சீகேல், பெல்லொடொன்ன, பாப்டீஷியா இவைகள் கொடுக்கப்பட்டு சரீர உஷ்ணம் ஒழுங்காகவுமிருந்து தற்போது நல்ல நிலைமையில் நம் ஹோமியோபதியையும் நம் ஆசிரியரின் போதனு முறையையும் பாராட்டி சந்தோஷமடைந்ததுடன் நம் ஆசிரியருக்கு வாழ்த்துச் செய்தியும் அனுப்பினார்கள். *

நமது சுகாதார அமைச்சர் தெரிவித்த ஒரு புத்தகமும் ஒரு மருந்துப்பெட்டியுமுள்ள ஹோமியோபதியின் சக்தி எப்படி?

---

*

5—10—52.
விரகாலூர்.

ஹோமியோபதிஆசிரியர் அவர்கள் திவ்ய சமூகத்திற்கு தங்களது போதனையாலும் சேவையாலும், எனக்கு கிடைத்த பாக்கியம்,என்றும் மறக்க முடியாது. எனது மனைவிக்கு 11 வருஷங்களாக 4 குழந்தை உற்பத்தியாகி 3 மாதம் 4 மாதங்களில் குழந்தைகள் கருச்சிதைவு ஏற்பட்டுவந்தது.

தங்களிடம் பயின்ற, ஒழுக்கம் நிறைந்த தோழர் Dr. தாண்டவ ராய பிள்ளை அவர்களிடம் மேல்கண்ட விஷயங்களை சொன்னேன். கர்ப்பம் ஏற்பட்ட 4 மாதத்திலிருந்து அவரிடம் மருந்து வாங்கி சாப்பிட்டு வந்ததுடன் அவர் சொன்னபடி நடந்துகொண்டு வந்தேன். திறமை வாய்ந்த ஆசிரியராகிய தங்களது மாணவன் சொற்படி நடந்தேன். 21—9—52ல் எனது குலம் விளங்க என் மனைவி சவுகரிய மாக ஒரு ஆண் மகவை பெற்றுள். பிறந்து 10 நாட்கள் வரை மருந்து கொடுத்தார் நல்ல சவுகரியமாக இருக்கிறது. தெய்வீகத்தன்மை போன்ற தங்களது போதனையும் சேவையும் என் போன்ற பலர் மகிழ்ச்சியடையும்படி தங்களையும் தங்கள் மாணவர்களையும் நீடூழி வாழும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக. நானும் என் பந்துக்கள் நண்பர் கிராமத்தினேபோர்களையும் தெய்வீக ஹோமியோபதி வைத்திய சிகிச்சையே செய்து கொள்ளுங்கள் என்று ஆர்வத்துடன் உபந்நியாசம் செய்வதுடன் தெய்வீக ஹோமியோபதியை என்றும் மறக்கமுடியாது.

இங்ஙனம்,
M. கிருஷ்ணன் சேர்வை,
விவசாயம், செங்கல் உற்பத்தியாளர்,
வீரகாலூர்.

மதுரை ஹோமியோபதி டிஸ்பென்ஸரி

1952 அக்டோபர் மீ 20௳ காலை 9.15 மணிக்கு ஸ்ரீ S.V. சுவாமி B. A., பார் அட் லா, அவர்களின் தலைமையில் டி ஆஸ்பத்திரியின் திறப்புவிழா நடைபெறும். மதுரை நகரசபைத்தலைவர் ஸ்ரீ T. K. ராமா அவர்கள் M. L. A. இந்த ஆஸ்பத்திரியைத்திறந்து வைப்பார். இந்த ஆஸ்பத்திரி மதுரை ஹோமியோபதி டாக்டர் K. ஸ்ரீனிவாசன அவர்களால் நடத்தப்படும்.

ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவில் 'குழந்தைகள்'

டாக்டர் V. R. மூர்த்தி அவர்களின் மெட்டீரியா மெடிகாவிலிருந்து தொகுக்கப்பட்டது.

Dr. N. R. தக்ஷிணாமூர்த்தி, குணமங்கலம்.

அகேரிகஸ்: தாமதமாக நடக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளல்.

அகோனைட்: சிசு பிறந்ததும் மூத்திர அடக்கம் மூளையில் ரத்தம் ஏறுதல் குறிகள். நாடி துடிக்காமை மூச்சு இன்மை காமாலை கண்ணழற்சி. ஜனனேந்திரியங்களுக்கு கை கொண்டுபோதல். பிறந்த சிசுக்களுக்கு பிராணவாயு குறைவால் சுவாசம் தடைபடல். ஆரம்ப தாபசுரம் (பொதுவாக ஆரம்ப உபாதிகள்.)

அக்டியா ரஸிமாஸா: காலை வயிற்றுப்போக்கு பல் முளைக்கும் காலத்தில் உபாதிகள்.

அக்னஸ் காஸ்டஸ்: சிறுவர்களின் வயிற்றுப்போக்கு.

அபிஸிந்தியம்: குடல் உபாதியால் ஏற்படும் வலிப்பு, கால்கள் சில்லிப்பு. வலிப்பு வேகமாக வருதல். கூக்குரலுடன் பிரக்ஞையற்றுக் கீழே விழுதல். கை கால்கள் இழுப்பு, வாயில் நுரை. பற்களைக் கடித்தல் பிறகு அரைமயக்கம், உள் அவயவங்களில் பாரிசவாயு. வலிப்பில் ஒரு சொட்டு விட்டாலும் வேகம் குறையும்.

அபிஸ்மெல்லிபிகா: பிறந்த குழந்தையின் தொப்புளில் ரணம். வெகுநேரம் கழித்து குழந்தை மூத்திரம் விடுதல். வீல் என்று அலறுதல் கையை தலைக்கு கொண்டுசெல்தல். பகலில் மட்டும் தாய்பால் குடித்தல். இரவில் தாய்பால் குடியாமை. குமட்டல், பித்தம், கோழை. ரத்த சம்பந்த வாந்தி.

அப்ரோடேனம்: குழந்தைகளின் முறட்டு சுபாவம். குழந்தைகளின் தொப்புளில் ரத்தம் கசிதல். முள்ளெலும்பு அழர்ச்சி. கவலை, சோர்வு, வெடுவெடுப்பான குணம். முறட்டுத்தனம், தலையை நிமிர்த்தி வைத்துக்கொள்ள முடியாமை, குழந்தைகளின் பீஜம் பெருத்தல். கடைசியில் முக இளைப்பு. முகம் சுருங்கி வெளுத்தல். கண்ணைச்சுற்றி நீல வளையங்கள். சரீர இளைப்பில் (நேட்ரம்மூர், அயோடியம், சோரினம், ஸானிகுலா, இவைகளைப் பார்க்கவும்.) முதலில் கால்களில் ஆரம்பித்தல். அதிகப்பசி அடிவயிறு வீக்கம் இக்குறிகளுடன் மேல் பாகங்களுக்குச் செல்லும்.

அமோனிம் கார்ப்: கோழை வெளிவர சிரமம். தொண்டையில் சதை வளர்தல். இருதய நோயில் தூக்கத்தில் உபாதி. அதிகம் கண்டமாலை.

அம்ப்ராக்ரிஸியா: பித்தம் நரம்பு ஜலதோஷம் உபாதிஉள்ள குழந்தைகள் ஒல்லியாயிருத்தல் கை கால் சோர்வு

அயிலாந்தஸ்: கயிறு போன்ற புழுக்கள் (மலத்தில்)

அர்ஜண்டம் நைட்ரிகம்: அதிக வயதானது போன்ற தோற்றம் பால் குடிக்கும் குழந்தைகளின் சரீர இளைப்பு. ஒட்டி உலர்ந்த கிழவன்போன்றிருத்தல். சர்க்கரை தின்ன அவா. அதனால் வயிற்றுப் போக்கு மலம் வெளிவந்த சிறிது நேரத்தின்பின் பச்சைநிறமடைதல் அபானவாயு சத்தத்துடன் வேகமாக வெளிவரும் மலம். கண்வலி.

அலுமினு: மலச்சிக்கல் தட்டாமாலை சுற்றினால் கிறுகிறுப்பு. மெலிந்து ஒல்லியாயிருத்தல். கரப்பான் சிரங்கு சருமநோய் கண்களில் நீர்வடிதல். இமைகள் காலையில் ஒட்டிக்கொள்ளுதல். பிடிவாதம், கோபம் பசிக்காமை ஈறுகளில் ரத்தம் கசிதல். மண் சுண்ணும்பு காரை தின்னல் கெட்டியான முடிச்சுள்ளமலம் வயிற்றுவலி உப்பிசம்

ஆண்டிமோனியம் குரூடம்: பிறர் பார்ப்பது தொடுவது, பொருக்க முடியாமை. ஒருவருடனும் பேசாதிருத்தல். குமட்டல், சூடான சிவந்த முகம். ஒழுங்கின நாடி சுரம் போன்ற சூடு. குளிர்ந்த நீரில் ஸ்நானம்செய்தால் அழுதல் இவைகளுடன் மயக்கமுள்ள குழந்தைகள் கோபம் வெடுவெடுப்பு பால் ஆகாரம் உள்ளுக்குச் சென்றதும் வாந்தி, நாக்கு வெண்மையாக இருத்தல். வெய்யில் குளிர்ந்த ஸ்நானத்தால் உபாதி அதிகம்.

ஆண்டிமோனியம் டார்டாரிகம்: களகளத்த இருமல் முகவெளுப்பு வெளியேற்ற முடியாத கபம். சரீரத்தின் மேற்பாகம் குளிர்ந்த வியர்வை. அசைவதிலும் பிறர் பேசுவதிலும் வெறுப்பு விஷபேதி (வாந்தி, மயக்கம் குமட்டல்) அதிக நாற்றமுள்ள மலம் குழகுழப்பு பச்சைப்புல் நிறம் குளிர்ந்த வியர்வை இவைகளுடன் இருத்தல் சிசு பிறந்ததும் வெளுத்திருத்தல். மூச்சுவிடாமலிருத்தல். மூச்சுவிட கஷ்டப்படுதல். உண்டதும் இருமல் வருதல் சுரம்

ஆரம்மூர் நேட்ரம்: நீடித்த மஞ்சட்காமாலை வெண்மை or களிமண் போன்றமலம். மலச்சிக்கல் அதிக எலும்பு வளர்ச்சி. உடல் முழுவதும் அரிப்பு. முதுகிலிருந்து பரவும் சில்லிப்பு. அடிவயிற்றில் நீர் வீக்கம்.

ஆரம் மெடாலிகம்: சிறுவர்கள், பருவமடையும் பெண்கள் பார்வை பலஹீனம் பருத்த சரீரம்.

ஆர்மிஷியாவல்க்: பயந்த கோளாறுல் ஏற்படும் வலிப்புகள்.

ஆர்னிகா மொண்டானு: கக்குவாய் இருமலில் இருமல் வருவதற்கு முன் குழந்தைகள் கதறுதல். கத்துவதால் ஏற்பட்ட இருமல்கள்.

ஆர்சனிகம் ஆல்பம்: திரவ கடின ஆகாரம் பானம் உள்ளுக்கு சென்றதும் வயிற்றுப்போக்கு. மலத்தில் ஜீரணமாகாத ஆகார வஸ்துக்கள் காணப்படுதல். வாயில் வெண்மையான குழிப்புண்கள், பலஹீனம், தாகம், குப்புறப்படுத்தல். மிகுந்த வேகமான சரீர இளைப்பு, அமைதியின்மை. சிறுவர்களின் கண்ணேய்.

ஆஸிட் அஸடிக்: இளைப்பு உருக்குலைக்கும் நோய்கள்.

ஆஸிட் பாஸ்பாரிகம்: எதிலும் வெறுப்பாக இருத்தல். வயிற்றுப் போக்கில் வலியில்லாதிருத்தல். உயர்ந்த ஒல்லியான சரீரம் பால் போன்ற மூத்திரம்.

ஆஸிட் பென்ஜாயிக்: கீழே படுக்கவைத்தால் சிசு பால் குடிக்காது ஆனல் தூக்கி வைத்துக்கொண்டு பால் கொடுத்தால் குடிக்கும்.

இக்கினேஷியா: கண்டிப்பதனல் வலிப்பு உண்டாதல், குரல் வளையைப் பிடித்துக் கொள்ளுதல். பல் முளைக்கும் காலத்தில் வாயில் நுரை தள்ளும், வலிப்புகள் அதிக கொட்டாவி, அதனல் தாடையில் வலி, தூக்கத்தில் கால்களைத் தூக்கிப் போடுதல், பற்களை அறைத்தல் அவசரமாகத் தண்ணீர் குடித்தலும் உடனே வலிப்புகள் வருதலும்.

இபிகாக்உனு: கரகரப்பான இருமலில் குரல் வளையை பிடித்துக் கொள்ளுதல். கக்குவாய் இருமலில் மூச்சிழத்தல், நீலநிறமடைதல், உடல் வெளுத்தல், விரைத்தல். வாய் அடைத்தல், வாயிலும் மூக்கிலும் ரத்தப் பெருக்கு. வாந்தி, குமட்டல், சில்லிப்பு.

எதுஸாஸைனுபியம்: பால் சிசுக்களுக்கு ஒத்துக்கொள்ளாமை உடனே பெரிய தயிர்கட்டி போன்ற வாந்தி, பலஹீனம், மயக்கம், மூச்சுத் திணறல். கட்டை விரல் இறுகி மூடிக்கொள்ளல். கண் கீழே திரும்புதல் காக்கை வலிப்பு மஞ்சள் பச்சை புளித்த தயிர்க் கட்டி போன்ற மலம் கண்குத்திடல், ரத்தக்கடுப்பு சீதபேதி, வாயில் நுரை, பல் கிட்டுதல், பலஹீனத்தால் நிற்கவும் தலையை நிமிர்த்தவும் முடியாமை. சரீரம் முழுவதும் நீலம் or கருத்தபுள்ளிகள்.

ஐயோடியம்: தொண்டையை பிடித்துக்கொள்ளல், பெரிய கட்டி போன்ற கோழை பருத்திருத்தல். வீக்கம் கல்லீரல் மண்ணீரல் வீக்கம் அழுக்கினல் வீக்கத்தில் வலி. சரீர இளைப்பு, அதிக பசி, குழந்தைகளின் வயிற்று கட்டிகள் மஞ்சட்காமாலை.

ஓபியம்: ஒட்டிப்போய் வதங்கிய கிழவனை ஒத்திருத்தல், கீழ் தாடை தொங்குதல், சுருங்கிய காய்ந்துபோன குழந்தைகள். சாந்தம் பருத்த சரீரம் மலபந்தம்.

கல்கேரியா ஆர்சனிகம் : மலேரியாவின் பின் ஏற்பட்ட வயிற்றுக் கட்டிகள், பசியின்மை, வறண்ட சருமம், ஈரல் குலைக்கட்டிகள். (கல்கேரியா and ஆர்சனிகத்தின் குறிகள் இருத்தல்) உடல் அதைத்த குழந்தைகள், குறிப்பிட்ட நேரத்தில் வரும் நீடித்த மந்த சுரம் முதுகில் சில்லிப்பு. தாகம்.

கல்கேரியா ஐயோடைட் : நிற்காமலும் நடக்க ஆரம்பிக்காமலும் உள்ள குழந்தைகள்.

கல்கேரியா கார்பானிகா : பார்வைக்கு கிழம்போல் தோன்றுதல். அதிக பருமன் தொளதொளத்த சரீரம் கொழுப்பாகவும் இருத்தல். உட்கார்ந்த இடம் விட்டு அசையாமலும் இருத்தல். உச்சிக் குழி மூடாமை. விரல்களில் ஒன்றோடொன்று குத்திக்கொண்டும் விளையாடிக்கொண்டுமிருத்தல். மந்தம் பல் முளைக்க தாமதப்படுதல். பால் ஒத்துக்கொள்ளாமை. புளித்த தயிர் கட்டி போன்ற வாந்தி. வயிற்றில் புளிப்பு தட்டுதல். வயிறு பானைபோல் பருத்திருத்தல். நாக்குபூச்சி முதலிய புழுக்கள் மலப்பை வெளியே வருதல். அபானத்தில் எரிச்சல் மணிக்குடல் கோளங்கள் வீங்குதல் கடினமாயிருத்தல் வயிற்றுப் போக்கு நாற்றம் மஞ்சள், பழுப்பு, வெள்ளை, களிமண் போன்ற பிசுக்கென்ற மலம். சிசு or ருதுவாகாத சிறு பெண்களின் வெள்ளைப் பாடு. குழந்தை நடக்காமலும் பேசாமலும் இருத்தல். பயந்த கோளாறால் வரும் வலிப்புகள், படர் தாமரை மஞ்சள்நிற சீழ் குழந்தைகளின் கண்ணில் பூ விழுதல் or விரை பெருத்தல், குளிர்ந்த தண்ணீரிலும் மழைகாலத்திலும் உபாதிகள் அதிகரித்தல்.

கல்கேரியாபாஸ் : மெலிந்த ஒற்றைநாடியுடல் ரத்தசோகை பெரிய தலை அடிவயிறு தளர்ச்சி முகம் வெளுத்திருத்தல் or மஞ்சளாக இருத்தல் மூக்கு காது சில்லிப்பு பல் தாமதமாக முளைத்தல் நடக்கக் கற்றுக்கொள்ளாமை, முள்ளந்தண்டு பலஹீனம், சரீரத்தைத் தாங்க சக்தியின்மை கழுத்து மெலிதல் பலஹீனம் தலையைத் தாங்க முடியாமை, பாலை வாந்தியெடுத்தல், உண்டபின் வயிற்று வலி, அடிவயிறு சுருங்கி விழுதல் வெளித்துறுத்தும் மூலம், மூலத்தில் சீழ் or மஞ்சள்நிற பொருள் கசிதல் உச்சிக்குழி இருபாகங்களும் திறந்திருத்தல், முறிந்த எலும்புகள் ஒன்று சேராமை. அடிக்கடி சளிபிடித்தல் இளைத்தல் பல் முளைக்கும் பருவத்தில் அதிக அபான வாயு பிரிதலுடன் வயிற்றுப்போக்கு, மலம் பச்சை நிறம், சூடு, இளகல், நாற்றம் குழகுழப்பாக இருத்தல். சுட்ட மாமிசம் உப்பு தின்பதில் அதிக பிரியம். எப்போதும் தாய்பாலை குடிக்கப்பிரியம். தாய் பாலில் அதிக உப்பு ருசி இருப்பதால் சிசு தாய் பாலை வெறுத்தல். தொட்டிலிலிருந்து எடுத்தவுடன் குழந்தை மூச்சு திணறுதல்.

(தொடரும்)

Edited, Printed & Published by Dr. V. R. MURTY, at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam.